செ.வெ.எண். 215 நாள்:29.03.2018

**திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தில் டிஜிட்டல் அட்வெர்ட்சைசிங் தொழில் நுட்பத்தில் இலவச வைபை வசதியை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் துவக்கி வைத்தார். மேலும் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையங்கள், பள்ளி வகுப்பறை கட்டிடம் திறந்து வைத்தார்.**

-----

திருநெல்வேலி சங்கரன்கோவிலில் நகராட்சியில் இலவச வைபை சேவை துவக்க விழா மற்றும் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டிடங்கள் திறப்பு விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.03.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு சங்கரன்கோவில் பழைய பேருந்து நிலையத்தில் டிஜிட்டல் அட்வெர்ட்சைசிங் தொழில் நுட்பத்தில் இலவச வைபை சேவையை துவக்கி வைத்தார். தொடர்ந்து காயிதேமில்லத் தெரு பகுதியில் ரூ.7.50 மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம், திருப்பூர் குமரன் நகர் பகுதியில் ரூ.7.50 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம், கழுகுமலை சாலை, காவேரி நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட பள்ளி கூடுதல் வகுப்பறை கட்டிடம் ஆகிய கட்டிடங்களை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள் திறந்து வைத்தார்கள். நகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டிதந்தமைக்கும் காவேரி நகர் பகுதியில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் செய்தமைக்கும் அப்பகுதி பெண்கள் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

சங்கரன்கோவில் பேருந்துநிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள இலவச வைபை சேவை டிஜிட்டல் அட்வெர்ட்சைசிங் தொழில் நுட்பத்தில் முதல் முறையாக அமைக்கப்பட்டுள்ளது. சங்கரன்கோவில் பேருந்து நிலையத்தை சுற்றி 600 மீட்டர் வரை இலவச வைபை வசதி பெற்றுக்கொள்ளலாம். ஒரே நேரத்தில் 500 நபர்கள் இவ்வசதியை பயன்படுத்த முடியும். இச்சேவையின் போது தமிழ்நாடு அரசின் விளம்பரங்கள் மற்றும் விழிப்புணர்வு செய்திகள் இணைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் திரு.தாணுமூர்த்தி, முதன்மை கல்வி அலுவலர் திருமதி.முருகானந்தம், குழந்தைகள் வளர்ச்சி திட்ட மாவட்ட திட்ட அலுவலர் திருமதி.சாந்தி, டான்பெட் துணை தலைவர் திரு.கண்ணன் (எ) ராஜூ, ஆவின் தலைவர் திரு.ரமேஷ், நேசவாளர் கூட்டுறவு சங்க தலைவர் திரு.ஆறுமுகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பையாபாண்டியன், முக்கிய பிரமுகர் திரு.வேல்முருகன் மற்றும் அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.